Registered as a Newspaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி–6 | 19–03–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –030

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிரேம் செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.
(சி-9407)

# திருமலை மாவட்டத்தைக் கூறுபோட முயலும்

# பேரினவாதிகளின் சதியை முறியடிப்போம்!

## கூட்டமைப்பு வேட்பாளர் இரா.சம்பந்தன்

(திருகோணமலை)

**திருகோணமலை மாவட்டத்தைக் கூறுபோடும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதற்கு பேரினவாதிகள் திட்டமிட்டு வருகின்றார்கள். அவர்களின் திட்டத்தைத் தவிடுபொடியாக்குவதாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் பேசும் வாக்காளர்கள் அளிக்கும் தீர்ப்பு அமைய வேண்டும்- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலை முத்துக் குமார சுவாமி கோயில் வீதியில் நடைபெற்ற கூட்டமைப்பின் பிரச்சாரக் கூட்டத்தில் பங்குபற்றி பேசும் போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர் உரிமைப் போராட்டம் தந்தை செல்வா காலத்தில் அமைதி வழியில் நடைபெற்றது. இது முதலாவது கட்டம். பின்னர் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியது. விடுதலைப்புலிகளினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஆயுதப் போராட்டம் காரணமாக கொழும்பு அரசு விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது. இது இரண்டாவது கட்டம். அதன் ஒரு பகுதியாக விடுதலைப்புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக் கட்டமைப்பு முன்மொழிவைச் சமர்ப்பித்துள்ள நிலையில், மூன்றாம் கட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், விடுதலைப்புலிகளும் ஒன்றுசேர்ந்து பொதுத் தேர்தலைச் சந்திக்கின்றனர் என்று சம்பந்தன் தெரிவித்தார். இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக் கட்டமைப்பை வழங்கியேயாக வேண்டும் என்ற காலகட்டத்தில் தமிழ் பேசும் வாக்காளர்கள் அளிகப்போகும் தீர்ப்பு, தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப்போகிறது என்றும் சம்பந்தன் தெரிவித்தார். (25)

## மட்டு. ஏறாவூரில்

## பிரபாகரன் பெயரைக் கூறியதும் மக்கள் பலத்த கரகோசம்

மட்டு-ஏறாவூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் தமிழர்களின் தேசியத் தலைவர் தம்பி பிரபாகரன் என்று குறிப்பிட்டதும் அங்கிருந்த மக்கள் பலத்த கரகோசம் செய்து தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

நேற்றுப் பிற்பகல் ஏறாவூரில் விபுலானந்த வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு மேற்படி பாடசாலை அதிபர் மகேந்திரவர்மன் தலைமையில் நடைபெற்றது. அங்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் "புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிங்கள தேசத்தின் சார்பாக ரணில் விக்கிரமசிங்கவும் தமிழீழத்தின் சார்

(IVஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலின் பின் அமையவுள்ள அரசாங்கம் புலிகளை அணுகியேயாக வேண்டும்!

### சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் இலங்கையில் அமையவுள்ள அரசு விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை அணுகி ஆக வேண்டும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; விடுதலைப்புலிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள பிளவு அந்த அமைப்பிற்கு இடையே ஒரு யுத்தத்தில் போய் முடியாது. ஏனெனில் நீண்டகால நோக்கில் பார்த்தால் விடுதலைப்புலிகளின் கிழக்கில் பலம்வாய்ந்த ஒரு தளபதியாக கருணா அந்த அமைப்பில் இருந்து வளர்ந்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அமைப்பை எவராலும் பலவீனப் படுத்த முடியாது. எதிர்வரும் தேர்தலின் மூலம் ஆட்சி அமைக்கும் அரசு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து விலகிச் சென்றிருக்கும் கருணாவை எப்படி அணுகலாம் என்ற வழிமுறையைக்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கில் தேர்தல் சாவடிகள் குறித்து நாளை தீர்மானம் எடுக்கப்படும்

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

வடக்கு-கிழக்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாக்களிப்புகளை நடத்துவது தொடர்பாக நாளை தீர்மானம் எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நடைபெற்ற நாட்டின் அனைத்து தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலர்களின் கூட்டத்தில் இந்த அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் விடுத்தார். இதேவேளை, வன்னி மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேச வாக்காளர்களின் வாக்கு வாக்களிப்பு தொடர்பில் நேற்று முன்தினம் வவுனியாவில் மகாநாடு ஒன்று நடைபெற்றது. வவுனியா, மன்னார் கட்டளை அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் வவுனியா அரசாங்க அதிபரும் இந்த மகா நாட்டில் பங்குபற்றினர்.

இந்த மகாநாட்டில் முல்லைத் தீவு மக்கள் வாக்களிக்க ஓமந்தை பாடசாலையில் 64 வாக்குச் சாவடிகளை அமைப்பது என பரிந்துரை செய்யப்பட்டது. இடம்பெயர்ந்த மக்களுக்கென 2 வாக்குசாவடிகளும், ஓமந்தை மக்களுக்கென 1 வாக்குச் சாவடியும் அடங்கும். (32)

## திருமலை ஐ.தே.க. தமிழ் வேட்பாளர் போட்டியிலிருந்து நேற்று விலகல்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசிக்கட்சி சார்பில் நியமிக்கப்பட்ட தமிழ் வேட்பாளர் தான் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கிறார்.

நடராஜா சாம்பவசிவமூர்த்தி என்பவரே சுகயீனம் காரணமாகப் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் திருமலை மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட ஏழு வேட்பாளர்களில் இவர் ஒருவரே தமிழ் வேட்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று இது தொடர்பாகப் பத்திரிகை அறிக்கையொன்றை இவர் வெளியிட்டுள்ளார்.

## கிளி. உதயநகரில் கிணற்றிலிருந்து பெண், குழந்தையின் சடலங்கள் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளி. உதயநகர் மேற்குப் பகுதியில் உள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து ஒரு பெண்ணினதும், குழந்தையினதும் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

உதயநகர் மேற்கு விசுவத்தனன் அம்மன் கோயில் வீதிக்கு அருகில் உள்ள கிணற்றில் இரண்டு சடலங்கள் மிதப்பதாக அப்பகுதி மக்களால் நேற்றி இரவு 7. 00 மணிக்கு கிளி. காவல் பணிமனையில் முறையிடப்பட்டது. இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த காவல்துறையினர் சடலத்தைப் பார்வையிட்டு அவற்றை கிணற்றில் இருந்து வெளியே எடுத்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட இருவரது சடலங்களும் இனங் காணப்பட்டுள்ளன. இவை இல. 296 கிளி. உதயநகர் மேற்கு விசுவத்தனன் அம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த ப.சாந்தினி

(IVஆம் பக்கம் பார்க்க)

### உருவப்படம் இணைப்பு

தியாகி அன்னை பூபதி அவர்களின் வர்ணத் திருவுருவப் படம் இன்றைய ஈழநாதம் பத்திரிகையுடன் இணைக்கப் பட்டுள்ளது.

## உந்துருளிகளில் பயணிப்போர் தலைக்கவசமணியக் கோரிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

உந்துருளியில் பயணிப்பவர்கள் தலைக்கவசம் (கெல்மெற்) அணிந்து பயணிக்கும் வண்ணம் தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் வேண்டுகை விடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக நடைபெற்ற விபத்துக்களில் அநேகமானவர்கள் தலையில் ஏற்பட்ட பலத்த காயத்தின் காரணமாகவே மரணமடைந்துள்ளனரென வைத்திய அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளதெனவும்,

எனவே உந்துருளியில் பயணிப்போர் இதனை கவனத்திற்கொண்டு தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் தலைக்கவசங்களை அணிந்து வீதிகளில் பயணங்களை மேற்கொள்ளும் வண்ணம் தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்து பிரிவினர் வேண்டியுள்ளனர். (சோ)

## தியாகி அன்னைபூபதி நினைவு நாட்கள் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்



தியாகி அன்னைபூபதியின் 16ஆம் ஆண்டுநினைவுநாள் இன்று தமிழர் தாயகம் தழுவிய ரீதியில் உணர்வெழுச்சியுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரச,அரசசார்பற்ற தனியார் நிறுவனங்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் நிர்வாகச் செயலகங்கள், காவல் பணிமனைகள் உட்பட அனைத்து செயலகங்களிலும் காலை 9.00மணிக்கு தேசியக்கொடி ஏற்றலுடன் தியாகி அன்னைபூபதி அவர்களின் திருவுருவப் படத்துக்கு சுடரேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும். இதனைத் தொடர்ந்து சிறப்புரைகள் என்பன இடம்பெறும். இன்று முதல் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி வரையான நாட்களில் சிரமதானம், உண்ணாவிரதம் என்பன கிராம ரீதியாக நடத்தப்படும்.

இந்நிகழ்வின் இறுதி மூன்று நாட்களும் காலை 9.00மணிமுதல் உண்ணாவிரதம் ஆரம்பமாகும். இறுதி

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

பளைக்கும் ஆனையிறவுக்கும் இடையில் A9வீதியில் 14-03-04 அன்று NPHD 8290க்குஉரிய அனுமதி பத்திர ஆவணங்கள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் கிளிநொச்சி அலுவலகத்தில் ஒப்படைத்து உதவுமாறு வேண்டிக் கொள்கின்றோம். சன்மானம் வழங்கப்படும். (4325)

S.J.S லேணர்ஸ் S.J.S லேணர்ஸ் S.J.S லேணர்ஸ் S.J.S லேணர்ஸ் S.J.S லேணர்ஸ் S.J.S லேணர்ஸ்

கிளி.நகரில்

## S.J.S லேணர்ஸ்



எதிர்வரும் 22.03.2004 திங்கள் தொடக்கம் கிளி/நகரில் சகல வாகனங்களுக்கும் முழு பயிற்சியளிக்கப்பட்டு அரச சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு மாதத்தில் பெற்றுத்தரப்படும்.

S.J.S லேணர்ஸ்

தொடர்புக்கு:- S.J.S லேணர்ஸ், பிரதான வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

குறிப்பு:- ஆயப்பகுதி நடுவப்பணிமனை முன்பாக

(4312)

நிர்வாகம்
S.J.S லேணர்ஸ்.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று–கிளிநொச்சி

வ.இல:- 121/2003,
தன்மை:- காணி
பெறுமதி:- 300000

வழக்காளி
*********

சுப்பிரமணியம் அரியபுத்திரன்,
இல-240, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

எதிர்
****

1) சின்னப்பு கதிரவேலு,
2) பசுபதிப்பிள்ளை நல்லம்மா,
மே/பா.ம.தவராசா,
247, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

- எதிராளிகள் -

## பகிரங்க அறிவித்தல்

குறித்த 1ஆம் எதிராளிக்கு,

மேற்குறித்த வழக்கினை, வழக்காளி, இந்நீதிமன்றில், உமக்கு எதிராகத் தாக்கல் செய்துள்ளார். உமக்கான அழைப்புக்கட்டளையை முறைநிறைவேற்றுனர் மூலம் சேர்ப்பிக்க முயன்ற பொழுது, நீர் அம் முகவரியில் இல்லாமையால், உமக்குரிய அழைப்புக்கட்டளையைச் சேர்ப்பிக்க முடியவில்லை. எனவே, நீரோ அல்லது உமது நலனில் அக்கறை உடையோரோ, இப் பகிரங்க அறிவித்தல் வெளியாகிய அன்றில் இருந்து 15 நாட்களுக்குள், ஏதும் சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்காது விடுமிடத்து, இவ் அறிவித்தலை நீவிர் ஏற்றதாகவே கொள்ளப்படுவீர் என்றும், உமக்கு எதிராக ஒரு முகவிளக்கம் மேற்கொள்ளப்பட்டு, தொடர் சட்ட நடவடிக்கைகள், மேற்கொள்ளப்படும் என்பதனை இதனால் உமக்கு அறியத்தரப்படுகின்றது. இந்த 2004ஆம் ஆண்டு, பங்குனி 9ஆம் திகதி.

வழக்காளிசட்டவாளர்,
தா.இ.குலசங்கர், டிப்போச்சந்தி,
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.

மன்றின் கட்டளைப்படி
கிளிநொச்சி.

(4309)

## விபத்தில் காயம்

பளைநகர்ப்பகுதியில் நேற்று முன்தினம் வீதிவிபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது. இரு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் லோகநாதன் என்பவர் தலையில் காயமடைந்து அங்கிருந்த மக்களால் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (11)

## 1,470 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களில் 1,470 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 108 விண்ணப்பங்கள் காலம் பிந்தியவை என்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

8784 தபால் மூல வாக்காளர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

## உதைபந்தாட்டம்

கரைதுறைப்பற்று கோட்ட பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளில் 17வயதுப் பிரிவில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு மகா வித்தியாலயமும் இரண்டாம் இடத்தை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

19வயதுப் பிரிவில் 1ம் இடத்தை மு/வித்தியானந்தாக் கல்லூரியும், 2ம் இடத்தை முல்லைத்தீவு ம.வியும் பெற்றுக் கொண்டன. இப்பாடசாலைகளே வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளன. (20)

## சுழற்காற்றால் கிளைகள் முறிந்தன!

(மல்லாவி)

மாங்குளத்தில் நேற்றுமாலை திடீரென பலத்த சுழல் காற்று வீசியது. இதனால் சிறிய சேதங்கள் ஏற்பட்டன.

புதிதாக அமைக்கப்பட்டுவரும் ஆயிரம் வீட்டுத்திட்டப் பகுதியில் வீசிய சுழல் காற்றினால் மரங்களின் கிளைகள் முறிந்தன. (24)

## முக்கிய அறிவித்தல்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவ பொங்கல் ஒழுங்கு மீளாய்வுக்கூட்டம் 19.03.2004 வெள்ளிக்கிழமை பி.ப 1.00மணிக்கு நடைபெறும் என சகல திணைக்கள தலைவர்கட்கும் அறிவித்திருந்தோம். அரசாங்க அதிபரின் வசதி கருதி இக்கூட்டம் அவரது தலைமையில் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும்.

தயவு செய்து கிளிநொச்சி மாவட்ட திணைக்களங்களின் தலைவர்கள் ஆலய செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(4328)

க.வைரமுத்து
செயலாளர்.

## பணிநிலை வெற்றிடம்

புதுக்குடியிருப்பில் இயங்கும் அலுவலகமொன்றில் பணியாற்றுவதற்கு நல்லொழுக்கமும், தேக ஆரோக்கியமும் உடைய சுறுசுறுப்பாய் செயற்படக்கூடிய பணியாளர்கள் தேவை.

**01. கணினி இயக்குனர் (ஆண்)**

கணினித்துறையில் ஆர்வமும் MS Word படித்தவராகவும் இருத்தல் வேண்டும். எட்டு மணிநேர வேலையில் மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரையான நேரம் பணியாற்றுதல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்: 2500-3400
......................+ 2000=4500/=
10x90

**02. நூலக உதவியாளர் (ஆண்/பெண்)**

சம்பள அளவுத்திட்டம்: 2500 -3400
......................+ 2000=4500/=
10x90

**03. அலுவலக பராமரிப்பாளர் (ஆண்)**

பணியாளர் அலுவலக உள்வேலைகளையும், அலுவலக வெளிவேலைகளையும் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்: 2200-3000
...................... + 2000=4200
10x80

**விண்ணப்ப முடிவுத்திகதி :- 24.03.2004**

**அனுப்பவேண்டிய முகவரி:- விளம்பர இலக்கம்11,
ஈழநாதம் பணிமனை,
புதுக்குடியிருப்பு.**

குறிப்பு:-
பணியாளர் அலுவலகத்திலேயே தங்கிநின்று பணியாற்றுவதும், புதுக்குடியிருப்பு மற்றும் அதன் அயற்பகுதியில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது.

(சி-7173)

## கரைச்சிப் பிரதேச சபை
## அறிவித்தல்

எமது பிரதேசத்தில் அதிகளவான மணல் அகழ்வதனால், ஏற்படும் சூழல் பாதிப்புகள் பற்றி 2004.03.09ந் திகதி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் கரைச்சிப் பிரதேச சபை ஆணையாளர், செயலாளர், பொருண்மிய மேம்பாட்டு மாவட்டப் பொறுப்பாளர், அவரது பிரதேசப் பொறுப்பாளர்கள், பொருண்மிய மதியுரையக இயக்குநர், செயலகச் சுற்றாடல் அலுவலர், தமிழீழ நிர்வாகசேவை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் எடுக்கப்பெற்ற தீர்மானங்கள் பொதுமக்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் தகவலுக்காகக் கீழே தரப்படுகின்றது.

மணல் அகழ்வு செய்வதற்கு அனுமதியளிக்கப்படும் இடங்கள் வருமாறு:-

01. கண்ணகைபுரம், மேராற்றுப்பகுதி
02. பன்னங்கண்டி, வட்டக்கச்சி, இராமநாதபுரம் வீதிக்குத் தெற்கே 3கி.மீ அப்பால் மேற்படி வீதிக்கு வடக்குப் பக்கம் மணல் அகழ்வது முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது.
03. காடிமோட்டை, பாரதிபுரம்

வேறு எவ்விடங்களிலும் மணல் அகழ்வு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அகழ்வு செய்பவர்களுக்கு ரூ.5000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்படும். கரைச்சிப் பிரதேச சபைப் பிரிவில் கல் அகழ்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன வாய்க்கால்களில் மணல் அகழ்வதாயின் நீர்ப்பாசன எந்திரியின் அனுமதி பெற்றபின்பே மணல் அகழ்ந்தெடுக்க முடியும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொன் நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

(சி 9424)

## ஈராண்டு நினைவலைகள்

தாயின் மடியில் முத்தாக
72 ★ 03 ★ 06



தாயக மண்ணில் வித்தாக
1992 ★ 03 ★ 19

### லெப்.ஆதவன்/ஜேம்சன்

சுப்பிரமணியம் பிரபாகரன்
ஆதவன் வீதி, முள்ளிவாய்க்கால் மேற்கு

ஈழமாதாவின் துயர்துடைக்க
ஈன்ற தாயிலும் மேலாக - பிரபா
தரணைத்தலைவன் சேனையிலே
தரணிதனை மீட்க அஸ்தமித்தாய் - ஆதவனாய்
வல்லரசின் வன்மையைக் கண்டித்தும்
வன்னியிலும் பலகளங்கள் வென்றாய்
முல்லைதனில் முன்னேறிய மூர்க்கரின்
முதுகெலும்புடைத்து முத்தமிட்டாய் - மண்ணதினில்
பன்னிரண்டாண்டுகள் பாய்தோடிப் போனாலும்
பாச உள்ளங்கள் மறக்குமா? உன்நினைவை!

அம்மா, அப்பா, அண்ணா,
அண்ணி, அக்காமார்,
அத்தான்மார், தம்பிமார்,
உறவினர்கள், போராளிகள்.

தகவல்:–
என். சுதர்சன்

(4327)

# மிதிவெடிகள் அகற்றப்பட்டும் மீளக்குடியமர அனுமதியில்லை

## வடமராட்சி - கற்கோவளம் மக்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

**வடமராட்சி - கற்கோவளத்தில் ஆறாயிரம் சதுர மீற்றர் நிலப் பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டபோதும் அதில் மக்களை மீளக் குடியமர இராணுவம் அனுமதியளிக்காது இழுத்தடித்து வருகின்றது என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

மேற்படி பகுதியில் இராணுவப் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே இப்பிரதேசம் காணப்பட்டாலும் இங்கு மிதிவெடிகளை அகற்றும் போது படையினர் பல வகைக் கெடுபிடிகளையும், மிதிவெடி அகற்றும் குழுவினர் மீது மேற்கொண்டு வந்தனர். படையினரின் பலத்த அடாவடித்தனங்கள் மத்தியிலும் இப்பிரதேசம் தம்மால் மிதிவெடி அபாயத்திலிருந்து மீட்டெடுக்கப பட்டிருப்பதாக டென்மார்க்கைச் சேர்ந்த டெனிஸ் மிதிவெடிகள் அகற்றும் குழுவின் அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு மீட்கப்பட்டுக் கையளிக்கப்பட்ட பிரதேசம் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே பாதுகாப்பு வலயங்களை அண்மித்து அமைந்துள்ளதால் தலைமைப்பீடத்தின் அனுமதி கிடைத்தால் மட்டுமே இப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்க முடியும் எனப் படையினர் தெரிவித்துள்ளனர். (33)

# அளம்பில் கமநலசேவை நிலையமும் விவசாய போதனாசிரியர் அலுவலகமும் திறப்பு

அளம்பிலில் அமைந்துள்ள கமநலசேவை நிலையமும், விவசாய போதனாசிரியர் அலுவலகமும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு திறப்புவிழா நேற்று முன்தினம் பெரும்பாக உத்தியோகத்தர் மாதவ ராஜா தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கினை முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் .க.தர்மலிங்கம், உதவி விவசாயப் பணிப்பாளர் இ.கோகுலதாசன், முல்லை மாவட்ட த.பொ.மே. நிறுவன மாவட்டச் செயலாளரும் ஏற்றிவைக்க,

தமிழீழத் தேசியக் கொடியினை அளம்பில் பிரதேச கடற்புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் யாழ் மன்னன் ஏற்றிவைத்தார். கட்டடத்தினை மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் இ.கோகுலதாசன் நாடாவினை வெட்டித்திறந்து வைத்தார்.

ஆசியுரைகளை, அளம்பில் முருகன் கோயில் பிரதம குருக்களும், அளம்பில் பங்குத்தந்தை யூட் அமலதாஸ் அடிகளாரும் வழங்கினார்கள்.

. சிறப்புரைகளை அளம்பில் வடக்கு கிராம அலுவலர் தெய்வேந்திரம்பிள்ளை, அளம்பில் தெற்கு கமக்கார அமைப்புச் செயலாளர் அந்தோனிப்பிள்ளை, முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இ.கோகுலதாசன், முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம், த.பொ.மே.நி. மாவட்டச் செயலாளர், கடற்புலிகளின் அளம்பில் பிரதேச அ.துறைப் பொறுப்பாளர் யாழ் மன்னார் ஆகியோர் வழங்கினார்கள். (20)

# யாழ்.இல் ஆபத்தை எதிர்கொண்டுள்ளேன்

## எரிக் சூல்கெய்மிடம் ஆனந்த சங்கரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"யாழ். குடா நாட்டில் நான் பெரும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளேன்"

இவ்வாறு ஆனந்த சங்கரி நோர்வே விசேடதூதுவர் எரிக் சூல்கெய்மிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் அவர் தமக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மக்கள் சுதந்திமாக தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு உரிமையுடையவர்கள் எனவும் அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## முல்லை-கல்விவலய

# பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட், எல்லே போட்டிகள்

முல்லைக்கல்வி வலயப் பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட், எல்லேப் போட்டிகள் எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

கரைதுறைப்பற்று கோட்ட மட்டத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் கிரிக்கெட், எல்லே பெண்களுக்கான போட்டியும் நடைபெறவுள்ளது. 23ஆம் திகதி அதே மைதானத்தில் ஆண்களுக்கான எல்லேப் போட்டியும் நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகளில் 22 ஆம் திகதி புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய மைதானத்தில் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியும், பெண்களுக்கான எல்லேயும் இடம் பெறும். 23ஆம் திகதி புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலய மைதானத்தில் ஆண்களுக்கான எல்லேயும் நடைபெறவுள்ளதாக உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மைக்கல் திலகராஜா தெரிவித்தார். (20)

# கருணாவுக்கும் அமெ.வுக்கும் எதுவித தொடர்புமில்லை

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

கருணாவின் செயற்பாட்டுக்கும், அமெரிக்காவுக்கும் எதுவித தொடர்புகளும் இல்லை என சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் யெப்றி லங்ஸ்றெட் தெரிவித்துள்ளார். இலங்கையில் தேர்தல் கண்காணிப்புக்காக அமெரிக்கா 6 இலட்சம் டொலர்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதில் 4 இலட்சம் டொலர் பெவரல் அமைப்புக்கும், தேர்தல் வன்முறைகளுக்கு எதிரான அமைப்புக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த தூதுவர் கருணாவின் செயற்பாட்டின் பின்னால் அமெரிக்கா இருப்பதற்கான காரணம் எதுவும் இல்லை எனக் குறிப்பிட்டார். இந்த விடயத்தில் அமெரிக்காவை தொடர்புபடுத்துவது ஏற்கக் கூடியதல்ல எனவும் கூறினார். (32)

## விசேட சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள் செயலாளர்களுடனான முக்கிய விசேட சந்திப்பு நாளை 20 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் நடைபெறவுள்ள இச் சந்திப்பில் மேற்குறிப்பிட்ட பதவிகளையுடையவர்களை தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கிளி.மாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் ராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (சோ)

# க.பொ.த. சா.த. பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளிவரும்

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

மேற்படி பரீட்சையில் தோற்றிய மூன்று இலட்சத்து எண்பதாயிரம் பரீட்சார்த்திகளின் விடைத் தாள்கள் திருத்தப்பட்டுள்ளன.

பொதுத் தேர்தலுக்கு முன்னதாக பெறுபேறுகளை அறிவிப்பதே இலகுவானதென பரீட்சைத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கிரேக்கத்தில் ஒலிம்பிக்போட்டி நடைபெறுவது சாத்தியமா?

கிரேக்க ஒலிம்பிக் போட்டிக்கான ஏற்பாடுகள் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளன.

போட்டிகள் ஆரம்பிப்பதற்கு ஒருமாதம் எஞ்சியிருக்கும் நிலையிலாவது பிரதான மைதானம் தயாராக இருக்கமாட்டாது என்று தெரிவிக்கப்படுவதே இதற்கான காரணமாகும்.

மேலும் போட்டியை ஆதரிக்கும் அரசியல் கட்சி பிளவுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாக இருக்கின்றன. அதற்கு பாதுகாப்பு வழங்குவதற்காக நேட்டோ படைகளை அழைப்பது என்ற தீர்மானமும் புயலைக் கிளப்பியுள்ளது.

# பாக்தாத்தில் கட்டடங்கள் நிறைந்த பகுதியில் கார்க்குண்டு வெடித்ததில் 27 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் அமைந்துள்ள பிரதான விடுதி மற்றும் அதனை சுற்றியுள்ள கட்டடங்கள் நிறைந்த பகுதியில் நேற்று இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் 27 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விடுதியில் வெளிநாட்டவர்களும் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்நோக்கும் கெரில்லாக்கள் அடிக்கடி இது போன்ற கார்க் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

# செவ்வாயில் உறைநிலையில் நீர்

## ஐரோப்பிய விண்வெளி ஓடம் ஊர்ஜிதம்

செவ்வாய்க் கிரகத்தை வலம் வரும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் ஓடம் பூமிக்கு படங்களை அனுப்பியுள்ளது.

இந்த கிரகத்தின் தென் முனையில் உறைந்த நிலையில் நீர் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதை புகைப்படங்கள் ஊர்ஜிதப்படுத்தியுள்ளதாக பிரான்ஸ் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

நாசா நிறுவனம் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பிய விண்வெளி வாகனங்களை நீரின் தடயங்களை கண்டுபிடித்த சில நாட்களுக்குப் பின்னர் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பிய விஞ்ஞானிகள் தற்போது செவ்வாய்க்கிரகத்தின் வடமுனையை ஆராய்ந்து வருகின்றனர்.

# ஈரான் அணுவாயுதங்களைத் தயாரிக்கும் சாத்தியக்கூறுகளை நிராகரிக்க முடியாது!

## ஐ.நா. அணுவாயுதக் கண்காணிப்பு அமைப்பின் தலைவர்

ஈரான் அணுவாயுதங்களை வைத்திருக்கும் சாத்தியக் கூறுகளை நிராகரிக்க முடியாது என ஐக்கிய நாடுகள் அணுவாயுத கண்காணிப்பு அமைப்பின் தலைவர் மொகமட் அல்பறாடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் மத்திய கிழக்கு, மத்திய ஆசியப் பிராந்தியங்களுக்கான உப குழுவின் முன்னிலையில் அவர் உரையாற்றினார்.

ஈரான் அணுவாயுதங்களை நிர்மாணிக்கும் நடைமுறையை ஆரம்பித்துவிட்டதா என்று கேட்டபோது பதிலளித்த அல்பறாடி இதுவரை தாம் அதனைக் காணாவிட்டாலும் சாத்தியக்கூறுகளை நிராகரிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

எனினும் ஆயுதக் கண்காணிப்பாளர்களுடன் ஈரானிய அரசு ஒத்துழைத்து நடப்பதாகத் தெரிவித்தார்.

# அல்பேனியர்-சேபியர் மோதல் 13 பேர் பலியென அறிவிப்பு

கொசோவோவில் சேபியர்களுக்கும் அல்பேனியர்களுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் பதின்மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக அஞ்சப்படுகின்றது.

குறித்த பிராந்தியத்தில் நேட்டோவும் ஐக்கிய நாடுகள் சபையும் தமது கட்டுப்பாட்டை நிலைநாட்டிய 1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெறும் மிக மோசமான வன்முறையாக இது அமைந்துள்ளது.

கொசோவாவின் எதிர்கால அந்தஸ்தை தீர்மானிக்கக் கூடிய பேச்சுவார்த்தைக்கு முன்னர் அமைதியை நிலைநாட்ட சர்வதேச சமூகத்தின் முயற்சிகளைப் பாதிப்பதாக இந்த வன்முறைகள் அமைந்துள்ளன.

பகைமை பூண்டிருக்கும் அல்பேனிய சேபிய சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல ஆண்டுகள் செல்லும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# அபுகஸ்- அல்மஸ்ஸி தீவிரவாத அமைப்பு ஸ்பெயினில் போர்நிறுத்தம்

அல்-ஹைறதாவுடன் தொடர்புடையதாகக் கூறிக்கொள்ளும் அபுகஸ்-அல்மஸ்ஸி அமைப்பு ஸ்பெயினின் நடவடிக்கை தொடர்பாக போர் நிறுத்தம் செய்வதாக அறிவித்துள்ளது.

அந்த நாட்டின் அரசாங்கம் ஈராக்கில் இருந்து துருப்புக்கள் வாபஸ் பெறுமா என்பதை அறிவதற்காக இந்தப் பிரகடனம் மேற்கொள்ளப்படுவதாக அபுகஸ்-அல்மஸ்ஸி படையணி அறிவித்துள்ளது.

சமீபத்தில் மட்றிட் நகர ரயில் குண்டுத் தாக்குதல்களுக்கு உரிமை கோரிய இந்த அமைப்பு சகல நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு தமது ஐரோப்பிய பிரிவுகளை கேட்டுள்ளது.

ஆனால் அல்மஸ்ஸி படையணி அல்-ஹைறதாவுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றி தெளிவான தடயங்கள் கிடையாது என்று அமெரிக்கா தெரிவிக்கின்றது.

# சனாதிபதி சந்திரிகாவின் 'ரூபவாஹினி' உரை

# தேர்தல் ஆணையாளரின் பணிப்பை மீறுகிறது

## பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் அமைப்பு அறிவிப்பு

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த 14ஆம் திகதி நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையினால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டம் அறிவித்துள்ளது.

இது பற்றி அது மேலும் தெரிவிக்கையில்; சனாதிபதியின் இந்த உரை சிறிலங்கா சனாதிபதியின் உரையாக இருந்தாலும் அதன் குறிக்கோளானது அவரால் வழி நடத்தப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு முழுமையான பிரசாரமாக அமைந்திருந்தமையினால் தேர்தல் ஆணையாளரின் வழி நடத்தலையும் அது மீறி உள்ளதாகவும் பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சனாதிபதி மாளிகை, கட்சிச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதும் அரசாங்கச் சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்யும் செயலாகும் எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன தமக்கு வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்காக அரசாங்கத்தின் அவசரகால நிவாரணங்களை விநியோகித்து வருகிறார்.

விவசாய அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவினால் இரண்டு அரசாங்க வாகனங்கள் கிங்குறாங்கொட வீட்டில் மறைத்துவைக்கப்பட்டுள்ளன. அத்துடன் குருநாகலிலும் அரசாங்க வாகனம் ஒன்று தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

போக்குவரத்து அமைச்சின் இரண்டு வாகனங்கள் குருநாகலில் தேர்தல் பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

தென் மாகாணசபையின் வாகனம் ஒன்று அந்த மாகாண முதலமைச்சர் எஸ்.ஜி.சிறிசேனவின் தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

மத்திய மாகாண சுகாதார அமைச்சு வாகனம் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவின் தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

வீடமைப்பு அமைச்சின் வாகனம் ஒன்று ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரின் தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது.

வடமேல் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு சனாதிபதியின் கீழான தபால் தொடர்புகள் மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் வாகனங்கள் முன்னாள் அமைச்சர் டி.எம்.ஜெயரட்ணவினால் தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

இந்நிலையில் அரசியல்வாதிகள் தம்மிடம் உள்ள அரசாங்கச் சொத்துக்களை ஒப்படைக்காது அவற்றைத் துஷ்பிரயோகம் செய்வதானது மிகவும் பாரதூரமானசெயல் என பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டம் குறிப்பிடுகின்றது. (32)

## கிளிநொச்சி மாவட்டத்தில் விருப்பத்துக்குரிய விளையாட்டுப்போட்டிகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டியின் விருப்பத்துக்குரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இதனடிப்படையில் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதியன்று கிளி. மாவட்ட செயலகவளாகத்தில் ஆண் பெண் இருபாலாருக்குமான பற்மின்ரன் விளையாட்டும், ஏப்ரல் 10ஆம் திகதி பூநகரி பள்ளிக்குடாவில் இருபாலாருக்குமான நீச்சல் போட்டியும், ஏப்ரல் 12ஆம் திகதியன்று கிளி.மகாவித்தியாலய மைதானத்தில் இருபாலாருக்குமான சதுரங்க விளையாட்டும் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளவர்களே பங்குபற்ற முடியுமெனவும், இதற்கான விண்ணப்பப் படிவங்களை கிளி.மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாமெனவும் தெரிவித்துள்ளனர். சோ)

## 'மீண்டும் துளிர்க்கும் வசந்தம்' யாழ்.இல் நேற்று அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

போராளிக் கவிஞர் அம்புலியின் 'மீண்டும் துளிர்க்கும் வசந்தம்' நூல் அறிமுகவிழா நேற்று யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பிற்பகல் 3.30 மணியளவில் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச்சுடரை கவிஞர் அம்புலியின் தாயார் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார்.

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் நூலை வெளியிட்டுவைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் பெற்றுக்கொண்டார். கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை இங்கு சிறப்புரையாற்றினார்.

இதில் போராளிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (33)

## - அமைச்சரவை அந்தஸ்து இல்லாத -

# 13 அமைச்சுக்கள் உடனடியாக சனாதிபதியினால் ரத்து

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் ஏற்கனவே பொறுப்பேற்கப்பட்ட அமைச்சரவை அந்தஸ்து இல்லாத 13 அமைச்சுக்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

சனாதிபதியினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த அமைச்சுக்கள் இரத்துச் செய்யப்பட்டன.

இதற்கமைய நீர் முகாமைத்துவம், வீடமைப்பு, வெளிநாட்டு அலுவல்களுக்கு உதவி புரியும் அமைச்சு, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, உல்லாசப் பயணத்துறை அமைச்சு, சமுர்த்தி அமைச்சு, நீர்ப்பாசனத்துறை அமைச்சு, விவசாயத்துறை அமைச்சு, தொழில்நுட்பத்துறை அமைச்சு, நெற் பயிர்ச் செய்கை மேம்படுத்தல் அமைச்சு, காணிக்கான பதிவுகள் அமைச்சு, விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சு என்பனவே தற்போது வர்த்தமானி அறிவித்தல் மூலம் ரத்துச் செய்யப்பட்ட அமைச்சுக்களாகும்.

இதேவேளை, நாடாளுமன்ற விவகார அமைச்சு உள்துறை அமைச்சுடனும், நகர அபிவிருத்தி அமைச்சு, மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சுடனும் இணைக்கப்பட்டுள்ளன.

பதின்மூன்று அமைச்சுக்கள் சனாதிபதியினால் ரத்துச் செய்யப்பட்ட அதேநேரம் மேலும் பதினான்கு அமைச்சுக்கள் சனாதிபதியின் பொறுப்பிலேயே இருக்கின்றன. (32)

## தேர்தல் நடைமுறைகள் குறித்து யாழ்.இல்உயர்மட்டக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் குறித்து கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பான முக்கிய உயர்மட்ட கூட்டமொன்று இன்று காலை 10 மணியளவில் யாழ். அரசசெயலகத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட தேர்தல் திணைக்கள தெரிவத்தாட்சி அலுவலகம் செ.பத்மநாதன், உதவி தெரிவத்தாட்சி அலுவலர் இ.நடராசா ஆகியோரால் நடத்தப்படும் இந்தக் கூட்டத்தில் மாவட்ட சிறிலங்கா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, வடபகுதி பொலிஸ்மா அதிபர் கருணாரத்ன, மற்றும் கட்சிகளின் சிரேஷ்ட பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக நேற்று சிறிலங்காவின் தேர்தல்ஆணையாளரைச் சந்தித்துவிட்டு யாழ்.தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் மாலை யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார். (33)

# அரச வாகனங்களை ஹக்கீம் முறைகேடாகப் பயன்படுத்துகிறார்

## - சனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

அமைச்சர் ரவூப் ஹக்கீம் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான பல வாகனங்களை அம்பாறையில், தமது தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுத்துவதாக சனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார். இது அரசாங்க சொத்தை முறைகேடாகப் பயன்படுத்தும் அதே நேரம் தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும் என சனாதிபதி பொலிஸ்மா அதிபரிடம் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். ஏற்கனவே இவ்வாறான குற்றங்களுக்கு பொலிஸ்மா அதிபர் மற்றும் சுயாதீன பொலிஸ் ஆணைக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தபோதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஹெல உறுமய போட்டியிலிருந்து விலக பெருமளவு லஞ்சம் வழங்க சிலர் முயற்சி

## கட்சி முதன்மை வேட்பாளர் குற்றச்சாட்டு

ஜாதிக ஹெல உறுமயவின் தேர்தல் வேட்பாளர்களைப் போட்டியிலிருந்து விலகுமாறு கோரிப் பெருமளவு பணம் கொடுக்க முயற்சிக்கப்பட்டதாக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் எல்லாவல மேதானந்ததேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய அவர், தமக்கும அமைப்புக்கும் மொத்தமாக 5கோடி ரூபா லஞ்சம் கொடுக்கப்பட முயற்சிக்கப்பட்டதாகக் கூறினார். இதில் ஒரு வேட்பாளருக்கு 5 இலட்சம் ரூபா ஒதுக்கப்படவும் சில தரப்புகள் இணங்கியுள்ளன. எனினும் தாம் ஒருபோதும் அரசியலில் இருந்து விலகப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். தம்மில் பலருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் எல்லாவல மேதானந்ததேரர் குறிப்பிட்டார். (32)

## - வர்த்தகருக்கான வரிச்சலுகை -

# உயர் நீதிமன்றின் விளக்கம் சனாதிபதிக்கு வழங்கப்படும்

வர்த்தகர்களுக்கு வரிச்சலுகையை வழங்குவதில் சனாதிபதிக்கு இருக்கும் அதிகாரம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் விளக்கம் எதிர்வரும் வாரத்தில் ரகசியத் தீர்ப்பாக சனாதிபதிக்கு அறிவிக்கப்படவுள்ளது. அரசாங்கம் அண்மையில் வர்த்தகர்களுக்கு வரிச்சலுகையை அனுமதித்திருந்தது எனினும் வரிச்சலுகையை அனுமதிப்பதற்கு தமக்கு மாத்திரமே அரசியலமைப்பின் மூலம் அதிகாரம் இருப்பதாக சனாதிபதி தெரிவித்திருந்தார். எனவே அது தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கோரியிருந்தார். இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. (32)

### தியாகி....

நாளன்று மாலை நினைவுக்கூட்டங்கள் நடைபெறுவதுடன் அன்று தமிழீழ நாட்டுப்பற்றாளர் தினமாகவும் அனுஷ்டிக்கப்படவுள்ளது என தமிழீழ மாவீரர் பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

### பிரபாகரன்...

பாக தமிழர்களின் தேசியத் தலைவர் தம்பி பிரபாகரனும் கைச்சாத்திட்டார்" என்று குறிப்பிடுகையிலேயே பொதுமக்கள் இவ்வாறு கரகோசம் செய்தனர்.

# வரும் தேர்தலில் ஐ.தே. முன்னணி 17 மாவட்டங்களில் வெற்றிபெறும்

## அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஆரூடம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி 17 மாவட்டங்களில் வெற்றி பெறும் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அமைச்சர் நேற்று கொழும்பில் ஊடக மகாநாடு ஒன்றை நடத் தினார். இதில் கருத்துரை வழங்குகையில் அவர், வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்று ஐக்கிய தேசிய முன்னணி 7 மாவட்டங்களில் மாத்திரமே வெற்றிபெறும் நிலை காணப்பட்டதாகக் கூறினார். எனினும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அதிருப்தி கொண்டவர்களும், வடக்கில் மீண்டும் யுத்தம் ஏற்படக் கூடாது என விரும்புபவர்களும் பொருளாதாரத்தின் வளர்ச்சியை விரும்பும் அனைவரும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களிக்க விரும்புகின்றமையே இந்த மாற்றத்திற்குக் காரணம் எனத் தெரிவித்தார். (32)

### கிளி....

(வயது-26), இவரது மகளான ப. விஜயதேவி (6 மாதம்) என் போரது சடலங்களே என அடையாளம் காணப்பட்டுள்ளன.

சடலமாக மீட்கப்பட்டோர் கடந்த 16ஆம் திகதி காலை 5 மணிக்கு மருத்துவமனைக்கு என புறப்பட்டுச் சென்றவர்கள் எனவும், இரவு 7 மணி வரை வீட்டுக்கு வரவில்லை எனவும் அவரது கணவரான மாடசாமி பத்மராசா (வயது-63) என்பவரால் கிளி. காவல் பணிமனையில் முறையிடப்பட்டிருந்தது.

மேற்படி சம்பவம் தொடர்பாக கிளி. காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (லோ)

### தேர்தலின்...

கண்டறிந்தாக வேண்டும்.

கேணல் கருணா என்னை அணுகப் பல்வேறு முறையில் முயற்சித்திருக்கின்றார். ஆனால் எவற்றையும் திரை மறைவில் விரும்பும் வழக்கம் எனக்கு இல்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் விடுதலைப்புலிகளுக்கும் பிரதான தலைமைக்கிடையில் பல்வேறு தொடர்புகள் இருந்து வருகின்றன. ஆனால் அதைப் பற்றி இப்போது கூறமுடியாது.

அடுத்த மாதத் தேர்தலில் எங்கள் கட்சி வெற்றியீட்டினால் அதன்படி அமையும் அரசு அமைதிப் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்தும்.

தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை விட தொழிற்திறன் முனைவுடன் அந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

ரணில்விக்கிரமசிங்க தமக்கு பொருத்தமான சிலருடன் இரகசியமான ஒரு மூலையில் அமர்ந்துகொண்டு ஆலோசனைகளைக் கூறி இந்தப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்பு அந்த அமைப்பிற்குச் செய்யவேண்டிய நடவடிக்கைகளுக்கு அவசியமான நிதியை நிதித்துறை அமைச்சர் வராமல் முடக்கிவிட்டார். எனவே அவருடைய பதவியும் பறிப்பதற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆனால் அவ்விதம் செய்யவில்லை எனவும் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.